05.11.2025

அ.வ.எண்.212/2022

வா.சா.1 - காளிமுத்து, த/பெ.பழனிச்சாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 05.11.2025 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்கள் ஆதியில் ஒரு மாரப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்கானது புல எண்.465/A க்கு மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மாரப்பப கவுண்டருக்கு புல எண்.465/A போக, புல எண்.465/B, புல எண்.464/A,B, புல எண்.466/A,B, புல எண்.469/1, புல எண்.489, 490, 477/A, 467/A1, 467/A3, 467/B1, B2, 477/B, 494/1, 475, ஆகியவற்றில் சுமார் 50 ஏக்கருக்கு மேல் மாரப்ப கவுண்டருக்கு பாத்தியம் என்றால் சரிதான். மாரப்ப கவுண்டருக்க நான்கு மகன்கள். 1. ராமன கவுண்டர், 2. ஆயிக் கவுண்டர், 3. கிருஷ்ண கவுண்டர், 4.ரங்கப்ப கவுண்டர் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள்.

2. மாரப்ப கவுண்டரின் நான்கு வாரிசுகளும் காலமாகிவிட்டனர். நான், ஆயிக் கவுண்டரின் மகள் காலம்சென்ற தங்கம்மாளின் மகன் 1ம் வாதி பழனிச்சாமியின் மகன் ஆவேன். பிரதிவாதிகள், ராமன கவுண்டரின் பேரன்மார்கள் என்றால் சரிதான். கிருஷ்ண கவுண்டர் மற்றும் ரங்கப்ப கவுண்டருக்கு வாரிசுகள் உள்ளனர் என்றால் சரிதான். இதுவரை மாரப்ப கவுண்டரின் வாரிசுகளுக்குள் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் சரிதான். அனுபவப்படி வருவாய்துறையில் உட்பிரிவு செய்தபடி அனுபவித்து வருகின்றார்கள் என்றால் எல்லா காலைகளிலும் உட்பிரிவு ஏற்படவில்லை, ஒரு சில காலைகளில் உட்பிரிவு ஏற்பட்டுள்ளது, ஒரு சில காலைகளில் கூட்டாக உள்ளது.

3. வா.சா.ஆ.1 ன் படியும், வா.சா.ஆ.2 ன் படியும், எங்களுக்கு தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களும் பொதுவில் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2017 ல் மேற்படி சொத்துக்களை பொறுத்து நானும், எனது மாமா சுப்பிரமணியம் மற்றும் அவரது குடும்பத்தாரும் தாவா சொத்து குறித்து ஒரு பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு 2022 ல்

என் தகப்பனார் எனக்கு ஒரு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்துக்களை பொறுத்து கேட்டுள்ள கோரிக்கை உட்பிரிவு படி கோருகிறேனா அல்லது எங்களது ஆவணங்களின் படி கோருகிறேனா என்றால் மூல ஆவணத்தின் அடிப்படையிலும், உட்பிரிவின் அடிப்படையிலும் உரிமை கோருகிறேன். தடத்தை மறைத்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

4. மேற்படி நான் கேட்டுள்ள கோரிக்கையை கூட்டு பாகஸ்தர்களையும் தரப்பினர்களாக சேர்த்து தான் கோர முடியும் என்றால் எனக்குள்ள தடத்தை மறைத்ததால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் 1ம் அயிட்ட சொத்தாக கோரியுள்ள தடம் மூல ஆவணத்திலும் மற்றும் உட்பிரிவு செய்ததிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆதி காலத்தில் வாய்மொழியாகத்தான் விடப்பட்டது. மாரப்ப கவுண்டரின் சொத்துக்களில் 50 ஏக்கருக்கு மேற்பட்ட சொத்துக்களில் ஒரு பகுதி, சொத்தை தான் தாவா சொத்தாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் மாரப்ப கவுண்டருக்கு 50 ஏக்கர் இல்லை, அதில் அவருக்கு ¼ பாகம் வரும். தடத்தை மறைத்ததால் தடத்திற்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

5. மாரப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட ஒரு பகுதி சொத்திற்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மாரப்ப கவுண்டர் சொத்தை பொறுத்து, அவரது வாரிசுகளும் மற்றும் வாரிசுகளிடம் கிரயம் பெற்றவர்களும் அனைவரும் ஒன்று சேர்ந்து தான் அவரவர்கள் உரிமை பற்றி முடிவு செய்ய முடியும் என்றால் அனைவரும் சேர்ந்து தான் முடிவு செய்ய வேண்டும். தாவா 2ம் அயிட்ட சொத்தில், தடம் கோரவில்லை, அதில் உள்ள 7 சென்ட் இடம் மட்டும் வீட்டை கோரியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் அவர்களது சொத்தை கம்பிவேலி போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். க.ச.எண்.465/A10 உட்பிரிவுக்கு, பிரதிவாதிகளுடைய குடும்பத்திற்கு தனிப்பட்டா உள்ளது என்றால் சரிதான், ஆனால் அது தவறாக கொடுக்கப்பட்டுள்ளது.

6. மேற்படி பட்டா பிரதிவாதிகளுக்கு 1980-1990 களில் UDR படி ஏற்பட்டது என்றால் சரிதான். 1980-1990 களில் UDR படி எங்களது பூமிகளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட பட்டாவில் எங்களது பெயர் கூட்டாக இல்லை என்றும், எங்களுக்கு வழங்கப்பட்ட பட்டாவில் பிரதிவாதிகள் பெயர் கூட்டாக உள்ளது என்றால் பொது இடம் கூட்டாக உள்ளது. 465/1, 22 கூட்டாக உள்ளது. மற்ற காலைகளில் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் பட்டா உள்ளது. பட்டா தவறாக இருந்திருந்தால் வருவாய் துறையில் மனு கொடுத்து அதை திருத்தி கொள்ளலாம் என்றால் சரிதான், ஆனால் 2003 ல் வழக்கு சொத்தை பிரதிவாதியின் தகப்பனார், பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் மூலம் கிரயம் செய்து கொடுத்துள்ளார்.

7. நான் 7-8 வருடங்களுக்கு முன்பு வருவாய் துறையில் மனு கொடுத்தேன். அதற்கு எந்த பதிலும் கொடுக்கவில்லை. வருவாய்துறையில் ஏதேனும் காரணத்தை சொல்லி தள்ளிப்போட்டு வந்தனர். நான், சூலூர் வட்டாட்சியரிடம் நில அளவையரிடம் மனு கொடுத்தேன். நில அளவையர் வருவார்கள் கூப்பிடுவார்கள் என்று சொன்னார்கள், ஆனால் கூப்பிடவில்லை. அதனால் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் இல்லை, பிரதிவாதி தடத்தை மறைத்து கம்பிவேலி போட்டு அடிக்க வந்தனர் அதனால் வழக்கு தாக்கல் செய்தேன், அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். வட்டாட்சியரிடம் மனு கொடுத்ததையும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததையும் வழக்கில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

8. தடத்தை மறைத்ததால் கம்பிவேலியை அகற்ற வேண்டும் என நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அதற்காக தான் இந்த வழக்கு தாக்கல் செய்தேன். கம்பிவேலியை அகற்றினால் தான் நான் செல்ல முடியும் என்றால் சரிதான். கம்பிவேலியை அகற்ற வேண்டும் என வழக்கு பரிகாரத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான், இடையூறு என்பது கம்பிவேலியை அகற்ற வேண்டும் என்பது தான். வா.சா.ஆ.9 புகைப்படத்தில், பிரதிவாதிகளோ, நானோ, இருப்பதாகவோ, தாவா சொத்திற்கான புல எண்ணுக்கான ஆதரமோ, குறிப்போ எதுவும் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம்

பார்வையிட்டு அளக்க  மனு தாக்கல் செய்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். தற்போது தான் விசாரணைக்கு வந்துள்ளேன்.

9. 465/A காலையை ஒட்டி கிழபுறமாக தார் ரோடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி தார் ரோட்டை ஒட்டி தான் 465/A காலையில் தான் எங்களுக்கு உட்பிரிவு செய்யப்பட்ட பூமியான 475A/6, 8, 19 ஆகிய பூமிகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பூமிகளுக்கு நான் தார் ரோட்டில் இருந்து சென்று கொள்ளலாம் என்றால் சரிதான். 475A காலைக்கு தென்புறமாக க.ச.463 காலையில் கௌசிகா நதியின் கரை உள்ளது என்றால் சரிதான். 465A/12 காலையில் உள்ள பூமி எங்களுக்கு பாத்தியப்பட்டது அது மேற்படி கௌசிகா நதியின் கரையை ஒட்டி வடபுறமாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி 12 பூமியை ஒட்டி 11 பூமி உள்ளது என்றால் பக்கமாக உள்ளது.

10. நான் எனது பூமிகளுக்கு  கௌசிகா நதியின் கரை வழியாகவும், மேற்படி அன்னூர் - கருமத்தம்பட்டி மெயின் ரோட்டின் வழியாகவும் சென்று கொள்ளலாம் என்றால் செல்ல முடியாது, அதில் முள் முளைத்து உள்ளது, 1.5 கி.மீ சுற்றி செல்ல வேண்டும். மேற்படி ரோட்டினை ஒட்டி உள்ள பூமிகளுக்கு ரோட்டின் வழியாக சென்று கொள்ளலாம் என்றால் சரிதான். ஆனால் புல எண்.465A11 , 465A12 ஆகிய பூமிகளுக்கு ரோட்டின் வழியாக செல்ல முடியாது.  தாவா தடத்தின் வழியாக தான் செல்ல முடியும். புல எண்.465A11 , 465A12  ஆகிய பூமிகளுக்கு  கௌசிகா நதியின் கரை வழியாக செல்ல முடியும் என்றும், செல்ல முடியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் அது தவறு.

11. புல எண்.465A21 காலை யாருடையது என்றால் லோகநாதன் மற்றும் கோபால்சாமி தாயாருக்கு பாத்தியப்பட்டது. மேற்படி காலையில், நடராஜன் அவரது மக்களான மகேஸ்வரி மற்றும் சந்திரகுமார் ஆகியோருக்கு 28.05.2012 ம் தேதியில் ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார்என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில், தார் ரோட்டிலிருந்து மேற்கே செல்ல தடம் உள்ளது என எழுதியுள்ளார் என்றால் தெரியாது, நான் படித்து பார்க்கவில்லை.புல எண்.465A காலையில் தென்புறமாக மேற்படி தார் ரோட்டிலிருந்து மேற்கே செல்ல  நடராஜன்

வகையறாவுக்கு உண்டான பூமிகளுக்கு தடம் உள்ளது என்றும் அதன் வழியாக தான் அவர்களது பூமிக்கு சென்று வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு ஒரு தடமே இல்லை.

12. புல எண்.465A காலையில் தென்புறமாக தார் ரோட்டிலிருந்து மேற்கே சென்று என்னுடைய பூமியான புல எண்.465A/12 பூமிக்கு செல்ல முடியும் என்றால் செல்ல முடியாது. அவ்வாறு ஒரு தடமே இல்லை. புல எண்.465B காலையில், எனக்கும், பிரதிவாதிகளுக்கும் பூமி உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்திலும் பாகப்பிரிவினை ஏற்படாமல் தடப்பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். மாரப்ப கவுண்டரின் சொத்து பொறுத்து அனைத்து வாரிசுகளையும் மற்றும் அவரது வாரிசுகளிடம் கிரயம் பெற்ற நபர்களையும் சேர்த்து முறையாக பாகப்பிரிவினை செய்தால் தான் எனது கோரிக்கையை நிறைவேற்ற இயலும் என்றும், அவ்வாறு செய்யாமல் எனது கோரிக்கையை ஏற்க இயலாது என்றால் சரியல்ல. எனது வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல,

13. நான் மற்ற காலைகளில் உள்ள பாகஸ்தர்கள் செல்வதற்கு இல்லாமல் தடத்தை மறைத்து வைத்து அவர்களுக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur